

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 26.01.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்









We Shine Academy

## தமிழக நிகழ்வுகள்

- **குடியரசு தினத்தை முன்னிட்டு திருப்பூரில் 70 மணி நேரத்தில் 90,000 ஆயிரம் ஸ்டிக்கர்கள்** பயன்படுத்**தி 1,745 சதுர அடியில் இந்திய தேசியக் கொடி** தயாரித்து **கல்லூரி மாணவர் எம்.பிரவீன்குமார் கின்னஸ் சாதனை** முயற்சியில் ஈடுபட்டார்.
  - இவர் சிவப்பு, வெள்ளை, பச்சை நிறத்தில் 4.5 செ.மீ. உயரம், 5 செ.மீ அகலம் என மொத்தம் 22.5 சதுர அளவு கொண்ட 90,000 ஸ்டிக்கரை பயன்படுத்தி 1,745 சதுர அடி கொண்ட பிளக்ஸ் பேனரின் தேசியக் கொடியை உருவாக்கியுள்ளார்.
  - **செய்தி துளிகள்:**
    - 71வது குடியரசு தினவிழா இன்று டெல்லியில் நடைபெற்றது
    - தில்லி ராஜபாதையில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தேசியக் கொடியை ஏற்றினார்.

## தேசிய நிகழ்வுகள்

- **2020-ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை மத்திய அரசு 25.01.2020 அன்று அறிவித்தது.** இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிக்கையின்படி, இந்த

ஆண்டு மொத்தமாக 141 பத்ம விருதுகள் வழங்க குடியரசுத்தலைவர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

- இதில் 7 பத்மவிபூஷண் விருதுகளும், 16 பத்மபூஷண் விருதுகளும், 118 பத்மஸ்ரீ விருதுகளும் அடங்கும்.
- **செய்தி துளிகள்:**
  - இந்த ஆண்டு பத்ம விருது பெறுவோரில் 34 பேர் பெண்களாவர்.
  - வெளிநாட்டவர்கள், வெளிநாடுவாழ் இந்தியர்கள் 18 பேருக்கும் பத்ம விருதுகள் வழங்கப்படுகின்றன.
  - இறப்புக்குப் பிறகான விருது 12 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

- **இந்தியா-பிரேசில் இடையே எண்ணெய் மற்றும் எரிவாயு, கனிம வளங்கள், பாரம்பரிய மருத்துவம்** உள்ளிட்ட **பல்வேறு துறைகளில்** நிலவும் **ஒத்துழைப்பை அதிகரிக்கச் செய்யும்** வகையில் **15 ஒப்பந்தங்கள் 25.01.2020 அன்று கையெழுத்தாகின.**
  - தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி-பிரேசில் அதிபர் ஜெயிர் பொல்சொனாரோ இடையேயான பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.
  - **செய்தி துளிகள்:**
    - இந்தியா-பிரேசில் இடையேயான வியூகம் சார்ந்த உறவை மேலும் விரிவடையச் செய்வதற்கான செயல்திட்டமும்

We Shine Academy™

தொடங்கப்பட்டுள்ளது.

- கடந்த **2019-ஆம் ஆண்டில் ஸ்மார்ட்போன் விற்பனையில் முதல் முறையாக இந்தியா அமெரிக்காவை மிஞ்சி சாதனை படைத்துள்ளது** என கவுன்டர்பாயின்ட் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.
  - சீனா தயாரிப்பு நிறுவனங்களின் அதிக அளவில் செல்லிடப்பேசிகளை அறிமுகப்படுத்தியதன் விளைவாக இந்தியாவில் கடந்த ஆண்டில் ஸ்மார்ட்போன் விற்பனை 7 சதவீதம் அளவுக்கு வளர்ச்சி கண்டது.
  - **செய்தி துளிகள்:**
    - கடந்த 2019-ஆம் ஆண்டில் இந்தியா ஸ்மார்ட்போன் சந்தை 15.8 கோடி செல்லிடப்பேசிகளை விற்பனை செய்தது.
    - 2019-இல் ஸ்மார்ட்போன் விற்பனையில் ஜியோமி (28%), சாம்சங் (21%), விவோ (16%) ஆகிய நிறுவனங்கள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளதாக கவுன்டர்பாயின்ட் தெரிவித்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **நியூஸிலாந்து டெவலப்மெண்ட் ஹாக்கி அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய மகளிர் அணி 4-0** என்ற கோல் கணக்கில் **வெற்றி** பெற்றது.
  - இந்திய அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை

வகித்தது. பரபரப்பாக நகர்ந்த இரண்டாவது பாதி ஆட்டத்தில் மீண்டும் ராணி ராம்பால் ஒரு கோலை பதிவு செய்து அணியின் கோல் கணக்கை உயர்த்தினார்.

- **செய்தி துளிகள்:**
  - இந்திய மகளிர் அணி கேப்டன் ராணி ராம்பால்
  - கடைசி வரை நியூஸிலாந்து மகளிர் ஒரு கோலைக் கூட பதிவு செய்யவில்லை.

## திருக்குறள்

**குறள் : 89**

பால்: அறத்துப்பால்

இயல்: இல்லறவியல்

அதிகாரம் : விருந்தோம்பல்

**உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**

**மடமை மடவார்கண் உண்டு**

**விளக்கம்:** பொருளுடையவராக இருக்குங்காலத்தில் வறுமையாவது விருந்தினரை உபசரித்தல் மேற்கொள்ளாத அறியாமையாகும் இ∴து அறிவில்லாதவரிடத்தில் காணப்படும்.